**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No. 220/2019**

**2024**ம் வருடம் செப்டம்பர் திங்கள் 03ம் நாள் வாதி தரப்பில் 2வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.திருநாவுக்கரசு, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | கிராமம் | : |
| தந்தை / கணவர் பெயர் | : | தொழில் | : |
| வயது | : | | |

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. எனக்கு இவ்வழக்கில் யார் வாதி, யார் பிரதிவாதி என்று தெரியும்.

2. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். இராமநாதன் எனது பெரியப்பா மகன்.

3. 3ம் பிரதிவாதியும், 1ம் வாதியின் அப்பாவும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்களை நான்தான் வழக்கறிஞருக்கு தெரிவித்தேன். நிரூபண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன்.

5. 3ம் பிரதிவாதி 1, 2 பிரதிவாதிகளிடம் கடன் கேட்ட விபரம் எனக்கு தெரியும். தொழில் செய்வதற்காக பணம் வேண்டுமென்று கேட்டார்.

6. 1, 2 வாதிகள் கேரண்டராக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

7. 1, 2 பிரதிவாதிகளிடம் 3ம் பிரதிவாதிதான் கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியின் பெயரில் சொத்துக்கள் எதுவும்

இல்லை என்பதால் 1, 2 பிரதிவாதிகள் கேரண்டராக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

8. கடன் கேட்கும் நபர்களுக்குதான் கடன் வழங்கப்படும் என்றால் சரிதான். கேரண்டராக கையொப்பம் செய்யும் நபர்களுக்கு கடன் வழங்கப்படவில்லை.

9. 3ம் பிரதிவாதிக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி பெற்ற கடனை திரும்ப செலுத்தாததால்தான் வாதிகள் ஆதாரமாக கொடுத்த சொத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. 3ம் பிரதிவாதி வாதிகளிடம் சேர்ந்து கொண்டு வழக்கை நடத்தவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)